# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# கேள்வி அறிவித்தல்

## பல்பொருள் விற்பனை நிலையத்தோடு இணைந்த போட்டோ பிரதி சேவைகள் வழங்குதல்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாணவர்களுக்கான பல்பொருள் விற்பனை நிலையத்தோடு இணைந்த போட்டோபிரதி சேவைகள் வழங்குவதற்கு இச்சேவை வழங்கலில் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இச்சேவையை பொறுப்பேற்பவர் இணங்கிய மாதாந்த வாடகையுடன் சேர்த்து குறித்த சேவை நிலையத்தின் மாதாந்த மின்சார பட்டியலுக்கான கொடுப்பனவையும் செலுத்துதல் வேண்டும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் அதனோடு இணைந்த முன் நிபந்தனைகள் அடங்கிய தகவல்களையும் (Prerequisite) பல்கலைக்கழக **பிரதிப்பதிவாளர் (பொது நிருவாகம்)** அவர்களிடமிருந்து **02.04.2025ம் திகதி வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரை** அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பல்கலைக்கழக காசாளரிடம் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்பாக ரூபா 5,000.00ம், மீளளிப்பு செய்ய முடியாத விண்ணப்பக்கட்டணமாக ரூபா 1000.00 ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பதிவாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் என்ற முகவரிக்கு **04.04.2025ம் திகதி அன்று பி.ப. 02.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது பிரதிப் பதிவாளர் (பொது நிருவாகம்) காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடப்படல் வேண்டும். மேற்படி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பல்பொருள் விற்பனை நிலையத்தோடு இணைந்த போட்டோ பிரதி சேவைகள் வழங்குதல்"** என தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்களை பிரதிப்பதிவாளர் (பொது நிருவாகம்) அவர்களிடமிருந்து 067-2255177 என்ற தொலைபேசி இலக்கத்தினூடக அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் யாவும் விண்ணப்ப முடிவு நேரத்திற்குப் பின் உடனடியாக பிரதிப் பதிவாளர் / பொது நிருவாகம் காரியாலயத்தில் திறக்கப்படும். அவ்வேளை, விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு**:

1. விண்ணப்ப முடிவு நேரத்திற்குப் பின், தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
2. பல்பொருள் விற்பனை நிலையத்தில் விற்கப்படும் பொருட்கள் யாவும் இலங்கை நுகர்வோர் அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளில் மாத்திரமே விற்க்கப்படுதல் வேண்டும்.
3. பல்பொருள் விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்ல விலை மனுதாரரினால் உத்தேசித்துக் குறிப்பிடும் ஆகக் கூடிய மாதாந்த வாடகையே சேவை உறுப்பினரை தெரிவுசெய்யும் பிரதான காரணியாகக் கொள்ளப்படும்.
4. எந்தவொரு விலை மனுவையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு பூரண உரிமையுள்ளது.

பதிவாளர்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
17.03.2025